JUDICIAL FORM NO.53

(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXII, Cr.P.C)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT, BHAVANI

Deposition of LW-   - Pw-1   Witness
for Prosecution

| DVC.No. | 12/2022 | Crime No. | - | Station | - |
|---|---|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| Name | **Pw1 அம்சவள்ளி** | Village | |
| Father's Name/Husband's Name | | Taluk | |
| Age | | Calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969 on the 23th day of January 2026 | | | |

**எதிர் மனுதாரர் ஆஜர்**

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

நான் தற்போது பழனிச்சாமி (எதிர்மனுதாரர்) வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன் என்றால், சரிதான். மேற்படி வீடானது பழனிச்சாமிக்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது என்றால், சரிதான். நான் பழனிச்சாமி வீட்டில் இருந்து வருவதை எதிர்மனுதாரர் தொந்தரவு செய்யக்கூடாது என்று நான் பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால், சரிதான். மேற்படி வீட்டில் நான் எத்தனை வருடங்களாக குடியிருந்து வருகிறேன் என்றால், சுமார் ஏழு வருடங்களாக குடியிருந்து வருகிறேன். அந்த வீட்டில் நான் தனியாகத்தான் குடியிருந்து வருகிறேன் என்றால், சரியல்ல. நான் எனது மகள் மற்றும் மாமியார் என அனைவரும் ஒன்றாக தான் குடியிருந்து வருகிறோம்.

தற்போது, நான் வசிக்கும் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள் என்றால் நான் மட்டும் தான் 3 வருடங்களாக தனியாக இருக்கிறேன். என்னுடைய ஆதார் கார்டு குமாரபாளையம் விலாச முகவரியில் தான் உள்ளது என்றால், சரியல்ல. ஊஞ்சம்பாளையம் முகவரியில் தான் உள்ளது. எனது மாமியார் என்னுடன் தற்போது இல்லை என்றால, சரிதான். அவர்களாக சென்று விட்டார். எனது மாமியார் என்னைவிட்டு சென்று 6 வருடங்களாக குமாரபாளையத்தில் வசித்து வருகிறார்

RAJKUMAR J Digitally signed by RAJKUMAR J Date: 2026.01.23 06:45:52 +0530

என்றால், சரிதான். எனது தொந்தரவின் காரணமாக எனது மாமியார் வீட்டை விட்டு வெளியே சென்று விட்டார் என்றால், சரியல்ல. அவரே சென்று விட்டார். நான் சொல்வது தவறு என்றாலும், எனது மாமியார் அவராக செல்லவில்லை என்றாலும், 50 ஆண்டுகளுக்கு மேல் அவர் அங்குதான் வாழ்ந்து வந்தார் என்றாலும், எனது துன்புறுத்தலின் காரணமாகத்தான் சென்றார் என்றாலும், சரியல்ல. எனது மாமனார் முன்னாள் ராணுவ வீரர் என்றால், சரிதான். எனது தாயாரின் வீடு குமாரபாளையம் என்றால், சரிதான். எனக்கும், எதிர்மனுதாரருக்கும் திருமணத்தின் பலனாக இரண்டு மகள்கள் என்றால், சரிதான். எனது இரண்டு மகள்களையும் எதிர்மனுதாரர் தான் சிறுவயதிலிருந்து பார்த்து பராமரித்து வந்தார் என்றாலும், அவர்களுக்கு திருமணம் செய்து வைத்தார் என்றாலும், சரியல்ல. நான்தான் அவர்களை பார்த்து பராமரித்து திருமணம் செய்து வைத்து வந்தேன்.

மேலும், நான் என்ன வேலைக்கு சென்றேன் என்றால், நான் எந்த வேலைக்கும் செல்லவில்லை. எனது கணவர் மருந்தாளுநர் படிப்பு படித்துள்ளார் என்றால், சரிதான். எனது கணவர் மருந்தாளுநர் ஆராய்ச்சி படிப்பு படித்துள்ளார் என்கிற விவரம் எனக்கு தெரியுமா என்றால், அதைப்பற்றி எனக்குத் தெரியாது. நான் எனது கணவரை விட்டு பிரிந்து 11–12 வருடங்களாகிறது என்றால், சரியல்ல. 3 வருடங்கள் தான் ஆகிறது. மேற்படி 3 வருடங்கள் என்பது இந்த மனு தாக்கல் செய்ய வேண்டும் என்பதற்காக எடுத்துக்கொண்ட காலம் என்றால், சரியல்ல.

**எதிர்மனுதாரர் தரப்பில் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Signature of Witness

Taken down before me in open court
readover to the witness in the presence
of the accused pleads and admitted by
him/her to be correct

RAJKUMAR J
Digitally signed by RAJKUMAR J
Date: 2026.01.23 06:46:03 +0530

Sd/– (J.RAJKUMAR)
Judicial Magistrate No.1, Bhavani.